அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 17/2014

எனது இல: EST-1/MISCL/ 06/0047
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2014.07.02

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணப் பிரதம் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகள் தொடர்பிலான பொருள்கோடல்கள்**

2012.12.31 ஆம் திகதி வரை தாபன விதிக்கோவையின் தொகுதி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் உள்ளடக்கத்துடன் 2013.07.08 ஆம் திகதி வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட தாபன விதிக்கோவையின் தொடக்கத்தில் உள்ளடக்கப்பட்ட எனது அறிக்கைக்கூற்றின்பால் தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது. தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பிலான பொருள்கோடல்கள் குறித்து எழும் பொருள் மயக்கங்கள் மற்றும் சந்தேகங்கள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளினால் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பான விசாரணைகளானவை தாபனப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து வினவப்படல் வேண்டும் என்று கூறப்பட்ட அறிக்கைக்கூற்றில் பந்தி 3 இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் உசாவப்படவுள்ள விடயங்கள் மற்றும் அவற்றை உசாவுவதற்கான முறை தொடர்பில் 2012.09.17 ஆம் திகதிய 12/2012 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலமும் தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்ற விடயத்திற்கு தங்களின் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. எனினும், அரசாங்க நிறுவனங்களானவை வேறுபட்ட விதங்களில் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு பொருள்கோடல்களினை வழங்கி நடவடிக்கை எடுத்து வருகின்றன என்பது கடந்த சில வருடங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆதலினால், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பில் பொருள்கோடல்கள் அடிப்படையில் பல்வேறுபட்ட அரச நிறுவனங்களின் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட, அவர்களின் தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கண்ணோட்டங்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் காரணமாக பல்வேறுபட்ட சேவைகள் மற்றும் நிறுவனங்களுக்கிடையில் நிறுவன மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

03. முழு அரச சேவைக்கும் ஏற்புடையதாக நிறுவனத் தீர்மானங்களில் ஒத்திசைவு இருத்தல் வேண்டும் என்றாலும் உரிய நிர்வாக விடயங்கள் குறித்து ஒத்திசைவல்லாத நடவடிக்கைகளை பல்வேறுபட்ட மாகாண சபைகள் எடுக்கின்றன. ஆதலினால், மாகாண அரச சேவை மற்றும் மத்திய அரசாங்கத்திலுள்ள அலுவலர்கள் தொடர்புபட்ட நிர்வாக விடயங்கள் தொடர்பிலான முரண்பாடுகள் காரணமாக அண்மையில் அரசாங்க அலுவலர்களினால் நிறுவனப் பிரச்சினைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பில் வழக்குத் தொடுக்கும் போக்கொன்று காணப்படுவதாகத் தோன்றுகின்றது.

04. அதற்கிணங்க, முழு அரச சேவையிலும் ஒத்த இயல்பினை அவதானித்து மாகாண அரச சேவை மற்றும் மத்திய அரசாங்கத்தில் சமாந்தர மட்டங்களிலுள்ள அலுவலர்களுடன் தொடர்புபட்ட நிர்வாக மற்றும் நிறுவன விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு சகல அலுவலர்களுக்கும் அறிவிப்பதற்கும் மற்றும் காலத்துக்குக் காலம் ஒரே பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்கள் குறித்து சமனான நடவடிக்கையினை எடுப்பதற்கும் தங்களின் தனிப்பட்ட கவனத்தினைச் செலுத்துமாறு தாங்கள் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

05. மேலும், மேற்படி விதத்தில் நடவடிக்கையினை எடுக்கும் போது தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் அமுலாக்கத்தில் ஏதேனும் பிரச்சினையான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டால், அத்தகைய ஏற்பாடுகள் தொடர்பிலான பொருள்கோடல்கள் மற்றும் அறிவுறுத்தல்களானவை தாபனப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்தே கோரப்படல் வேண்டும் என தங்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம் / பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு